1974 மார்ச் 14]

திரு எஸ். வடிவேல்: தலைவரவர்களே, மின் விளக்கு வசதி இல்லாத அரிசன குடியிருப்புக்களே இருக்கக்கூடாது என்று ஒரு திட்டத்தைத் தீட்டி செயல்பட்டதைப்போல, குடிதண்ணீர் வசதி இல்லாத அரிசன குடியிருப்புக்களே இருக்கத் கூடாது என்ற முறையில் ஒரு தீவிரத் திட்டத்தைத் தயாரித்து, அதன்படி அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு சுப்பிரமணியம் அவர்கள் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். உங்கள் கேள்விக்கும் அதே பதிலைத்தான் சொல்ல வேண்டும்.

திருப்பாச்சேத்தி அரிசன குடியிருப்பு.

*417—திரு த. சோணையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் திருப்பாச்சேத்தியில் உள்ள அரிசனங்களுக்கு மயானம் இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம், எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இரண்டு மயானங்கள் உள்ளன.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா: தலைவரவர்களே, இந்தத் திருப்பாச்சேத்தியில் அரிசன மக்களுக்கு என்று தனியாக மயானம் இல்லை. பொது மயானத்திற்குச் சென்றால் தகராறு வரும் என்று சொல்லி அங்குள்ள அரிசன மக்கள் மனக் கிலேசம் ஏற்பட்டிருக்கிறது. அது கசப்பாக மாறுவதற்குள் அவர்களுக்குத் தனி மயானம் அமைத்துக்கொடுக்க வேண்டும். ஏற்கெனவே இருந்த மயானம் அரிசன காலனிக்கு இடம் எடுக்கும்போது சேர்த்து எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு மயானம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: திருப்பாச்சேத்தியில் 106-2, 105-3 என்ற இரண்டு சர்வே நம்பர்களில் முறையே 42 செண்ட், 51 செண்ட், நிலம் மயானப் பூமியாக இருக்கிறது. அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். அது போதவில்லை என்ற நிலை வருமானல் வேறு புதிய நிலம் மயானத்திற்காக ஆர்ஜிதம் செய்யலாம்.

திரு. த. சோணையா: அமைச்சரவர்கள் இரண்டு இடங்களில் மயானம் இருப்பதாகச் சொன்னார்கள். திருப்பாச்சேத்தி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. நான் தினமும் அங்கு போய்வருகிறேன். அரிசனங்களுக்கு

மயானம் இல்லை என்று அமைச்சரிடமும், அரசிடமும் முறையிட்டிருக்கிறார்கள். மயானம் இல்லாததால் அங்கே கலவரம் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த மயானம் அழிக்கப்பட்டு விட்டது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு மயானம் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நான், மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அளித்த விபரங்களை வைத்து பதில் சொல்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் தகவலைவைத்து, மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்களுக்கும் கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் இடையே இந்த கேள்வியின்மீது நடைபெற்ற விவாதத்தைப் பார்க்கும்போது, அங்கே பொதுவாக இருக்கக்கூடிய மயானத்தில் அரிசனங்களுக்கு இடம் இல்லை என்று தெரிகிறது. ஆகவே, இந்தச் சச்சரவைத் தீர்த்து வைத்து, அரிசனங்களும் அந்த மயானத்தைப் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில்— தனியாக ஏற்படுத்திக் கொடுக்காமல்—அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சச்சரவுகளைத் தீர்த்து வைத்து அந்த மக்களுக்கு நன்மை செய்வது என்றால், அவர்களுக்கு இடமே இல்லாமல் போய்விடும். மாண்புமிகு அம்மையார் அவர்கள் நேற்று பேசும்போது கூட அரிசனங்களுக்கு என்று தனியாக இடம் ஒதுக்கக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியின்போதே இப்படி இருந்துவந்திருக்கிறது. அப்போது அம்மையார் அவர்கள் அதைத் தடுத்திருக்கலாம். ஆனால் முடியாது. இவை எல்லாம் முடியாத காரியங்கள். இன்னும் அரிசனங்களுக்குத் தனியாக வசதி செய்துகொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. தீண்டாமை முற்றிலும் ஒழிக்கப்பட்டு, எல்லோரும், சமம் என்ற நிலை ஏற்பட்டால், தனியாக இடம் ஒதுக்க வேண்டியதில்லை. அந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட இன்னும் நீண்டகாலம் ஆகும். அதுவரையில் அவர்களுக்கு நன்மைகள் செய்தாக வேண்டும். பொது மயானத்தில் அரிசன மக்களின் உடலை வைக்கக் கூடாது என்ற நிலையே ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். சிக்கல்கள் ஏற்பட்டால் போலீசார் மூலம் தீர்த்து வைக்கலாம். ஆனால் தனி இடம் கொடுத்தால் சிக்கல் இல்லை என்ற காரணத்தினால் இப்படிச் செய்கிறோம்.

பூவலம்பேடு அரிசனக் குடியிருப்பு.

*418 வினா.— திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பூவளம்பேடு அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டமும், இடுகாட்டுக்கு வழி அமைக்கும் திட்டமும் மேலும் காலதாமதம் ஆவதேன்?